செய்தி வெளியீடு எண்:552 நாள் : 02.11.2015

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள் சென்னை R.K.நகர் பகுதியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோகத் திட்ட கிடங்கு மற்றும் அமுதம் நியாய விலை அங்காடிகள் ஆகியவற்றில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியவிலை பருப்பு வகைகள், பாமாயில் ஆகியவை, உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளர் ஒதுக்கீட்டின்படி, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்படுவதை மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணையின்படி, கூட்டுறவு மற்றும் அமுதம் சிறப்பங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுவரும் மலிவு விலை துவரம் பருப்பு, ஒரு கிலோ மற்றும் அரை கிலோ எடையில் பாக்கெட் செய்யப்பட்டு உடனுடக்குடன் நகர்வு செய்யப்பட வேண்டுமென கிடங்கு அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நவம்பர் மாதத்திற்கு தேவையான அனைத்து வகை பொருட்களும் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்கள், தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அத்தியாவசியப்

பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் வகையில், இம்மாதம் 5ம் தேதிக்குள் அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட வேண்டுமென அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

மேலும், R.K.நகர் பகுதியிலுள்ள அமுதம் நியாய விலை அங்காடிகள் ஆய்வின் போது, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா என்பதைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், பொருட்கள் சரியான எடையுடனும், உரிய தரத்துடனும் சீரான முறையில் வழங்கப்படுகிறது என பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது அரசு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**